
## திராவிடத்தால் வாழ்கிறோம்

903

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

119



ஓவியம் : ரவி பேலட்

# விராலிமலை சண்முகம்

## மொழிப்போரின் வாளும் கேடயமும்

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த விராலிமலை சண்முகம் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

1963-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம். ‘பாண்டி மண்டல இந்தி எதிர்ப்பு மாநாடு’ நெல்லையில் நடைபெற்றது. பேரறிஞர் அண்ணா உரையாற்றுகிறார் “போராட்ட ரயில் புறப்பட்டு விட்டது. இந்தி ஆதிக்கம் நீடிக்கிற வரை, அது நிற்காது” என முழங்கினார். அடுத்த நாள் தேனி நகரில் நடந்த கூட்டத்தில் வெள்ளி வாளையும் கேடயத்தையும் இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழுத் தலைவர் கலைஞருக்குப் பரிசளித்தார். அதைப் பெற்றுக் கொண்ட கலைஞர், “இந்தி எதிர்ப்புப் போரில் களச்சாவு அடைந்து, என் உடல் மீது அறிஞர் அண்ணா அவர்கள் கண்ணீர் வடிக்கின்ற காட்சியை விட பெரும் பேறு எனக்கு இந்த உலகிலேயே வேறு ஒன்றும் கிடையாது” என அண்ணாவுக்கு முன் உரையாற்றினார். இருவரது உரை வீச்சும் தமிழ்நாட்டில் இந்தி ஆதிக்கத்துக்கு எதிராகப் பெரும்போரை நிகழ்த்திக் கொண்டிருந்த காலம். அண்ணாவும், கலைஞரும், கழக முன்னோடிகளும் கண்ணீர் வடித்த காட்சிகளும் ஏராளம். அவை மொழிப்போர் வரலாறாக, இன்றும் நமக்கு வாளும் கேடயமுமாகத் திகழ்கின்றன. அந்த வரலாற்றில் கழக உடன்பிறப்பு விராலிமலை சண்முகம் நீங்கா இடம்பெற்றவர்.

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம் நார்த்தாமலை என்கிற ஊரில் 1943-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11-ஆம் தேதி பிறந்தவர் சண்முகம். பெற்றோர் மு.இராமையா - சௌந்தரத்தம்மாள். தந்தையார் இசைக் கலைஞர். ஒரு அண்ணன், ஒரு தம்பி, ஐந்து தங்கைகள் கொண்ட பெரிய குடும்பத்தில் பிறந்தவர் சண்முகம். சொந்த ஊரில் 5-ஆம் வகுப்பு வரை படித்த சண்முகம். குடும்பச் சூழ்நிலை காரணமாக மேற்கொண்டு கல்வி கற்க முடியவில்லை. எனினும் வாசிப்பும் கேள்விஞானமும் கொண்டவர். இளம்வயதில் அண்ணன் மாணிக்கத்துடன் புதுக்கோட்டைக்கு வேலைக்குச் சென்றவர், 1960-ஆம் ஆண்டு வாக்கில் தன் தாயார் பிறந்த ஊரான விராலிமலைக்கு வந்து, மளிகைக் கடையில் பணியாற்றத் தொடங்கினார்.

அன்றைய ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தில் கழகம் வீச்சாக வளர்ந்து கொண்டிருந்த நேரம். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என தலைவர்களின் பேச்சாற்றல் மட்டுமல்ல, களத்தில் அன்பிலார் உள்ளிட்ட கழக முன்னோடிகளின் செயல்வேகமும் அப்பகுதிகளில் கழகத்தினை உயிர்ப்போடு வைத்திருந்தன. தொழிலாளியான சண்முகமும், கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, கழகக் கூட்டங்களுக்குச் சென்றுவரத் தொடங்கினார்.

### மொழிப்போர் முழக்கம்

1963-ஆம் ஆண்டு, கழகம் அறிவித்த இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரின்போது, தாய்மொழி உணர்ச்சி மிகுந்தவராக அறியப்படலானார். 1964-ஆம் ஆண்டு தொடக்கத்தில் இந்தித் திணிப்புக்கு எதிராக, கீழப்பழுவூர் சின்னச்சாமியின் உயிர்த் தியாகம், தமிழ்நாடு எங்கும் உணர்ச்சிப் பிழம்பாகக் கொதித்தது. திருச்சி மாவட்டமெங்கும் சின்னச்சாமியின் பேச்சாகவே இருந்தது. அந்த உணர்விலேயே இருந்த சண்முகம், பேருந்து, சரக்கு உந்துகளில் ‘தமிழ் வாழ்க! இந்தி ஒழிக!’ என்று முழக்கம் எழுதுவதை வாடிக்கையாக வைத்திருந்தார்.

விராலிமலை பகுதிக் கழகத்தினருடன் இணைந்து பணியாற்றி வந்த சண்முகம், இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தில் ‘இந்தி அரக்கி’ என கொடும்பாவி உருவத்துக்குத் தீமூட்டி தலையை மொட்டையடித்துக் கொண்டவர். அவ்வப்போது இந்தி நூல்களை எரித்தும், தனது எதிர்ப்பைப் பதிவு செய்வார்.

1965-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டம் தீவிரமடைந்து, கோடம்பாக்கம் சிவலிங்கம், விருகம்பாக்கம் அரங்கநாதன், சிவகங்கை ராஜேந்திரன், பீளமேடு தண்டபாணி, சத்தியமங்கலம் முத்து, அய்யம்பாளையம் வீரப்பன் என அடுத்தடுத்து நடைபெற்ற உயிர்த்தியாகங்கள் தமிழ்நாட்டில் உணர்ச்சித் தீப்பிழம்புகளை உருவாக்கி இருந்தன. ஒன்றியத்தின் ஆணவப் போக்குக்குத் தமிழ் இளைஞர்களின் உயிர் பறிபோவதை அறிந்து கலங்கிய அண்ணா, ‘மாணவர்களே மொழிப் போராட்டத்தைக் கைவிடுங்கள்’ என அறிவிக்கும் கட்டாயத்துக்கு ஆளானார்.

“இரண்டு இரயில் பெட்டிகள் சாம்பலானால் திரும்பப் பெறலாம், இரண்டு மாணவர்களின் உயிர்போனால் திரும்பப் பெற முடியுமா? மாணவர்களே போராட்டத்தைக் கைவிடுங்கள்” என அண்ணாவின் வேண்டுகோள் மாணவர்களை அசைத்தது.

> **“வீழ்ச்சியுற்றுக் கிடந்த தமிழினம் பகுத்தறிவுக் கருத்துகளால் இனமான மொழி உணர்வு பெற்று வீறுகொண்டு எழுந்த வீர வரலாற்றை ஒவ்வொரு தமிழரும் அறிந்துகொள்ள வேண்டும்”**

### போராட்டத்தை நிறுத்த வேண்டாம்!

அண்ணாவின் மனதை மாற்றவும், மொழிப் போராட்டம் அதே வேகத்துடன் தொடரவும், தனது உயிரையே கொடுக்கவும் நினைத்தார் சண்முகம். அதே வேகத்தில் அண்ணாவுக்குக் கடிதம் எழுதுகிறார்.

‘தி.மு. கழகத் தலைவர் அவர்களே...’ எனத் தொடரும் அந்தக் கடிதத்தில், ‘அண்ணா, தமிழ்த்தாயின் பாதம் இரத்தத்தால் கறை படிந்துள்ளது. நீங்கள் ஆணையிட்டால் தமிழகம் தங்கள் ஆணையைச் செய்ய காத்துக்கொண்டிருக்கிறது. சும்மா இருந்து விடாதீர்கள்” என 1965-ஆம் ஆண்டு பிப்ரவரி 23-ஆம் தேதி எழுதிய கடிதத்தை தன் நண்பன் மூர்த்தியிடம் அளிக்கிறார்.

அந்த நண்பனுக்கு எழுதிய கடிதத்தில், ‘நீ இதைப் படிக்கையில் நான் இறந்து போயிருப்பேன்’ என்றும், தன் சகோதரருக்கு “நான் உனக்குத் துரோகம் செய்து விட்டதாக நினைப்பாய். கிடையாது, தமிழுக்கு நான் செய்ய வேண்டிய கடமையைச் செய்தேன்” எனத் தெளிவாக கடிதம் எழுதி வைத்துவிட்டு, நஞ்சு அருந்தி இருக்கிறார் சண்முகம். மயங்கிக் கிடந்தவர் மீட்கப்பட்டு, திருச்சி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். சிகிச்சையில் இருந்தவரிடம் ‘ஏன் இப்படி செய்தாய்?’ என அவரது உடன்பிறந்த அண்ணன் மாணிக்கம் கண்ணீருடன் கேட்கிறார் “தலைவர்கள் போராட்டத்தைக் கைவிட்ட நிலையில், என் மூலமாவது மீண்டும் தொடரட்டும்! நமது குடும்பத்தில் தமிழுக்காக ஒருவன் இறந்தான் என்று இருக்கட்டும்!” என்று கூறி இருக்கிறார். சிகிச்சை பலனின்றி, பிப்ரவரி 25-ஆம் தேதி அவர் உயிர் பிரிந்தது.

மறுநாள் திருச்சி உய்யக்கொண்டான் ஆற்றங்கரையில் சண்முகத்தின் விருப்பப்படியே மொழிப்போர்த் தியாகி கீழப்பழுவூர் சின்னச்சாமி கல்லறை அருகிலேயே அவரது உடலும் புதைக்கப்பட்டது. திருச்சி மாநகரமே திரண்டு வந்தது. ஏற்கெனவே கொழுந்துவிட்டெரிந்த மொழிப்போர்க் களத்தில், சண்முகம் இறப்பும் அனலாகத் தகித்தது. இறப்பதற்கு ஐந்து நாட்களுக்கு முன் தன் உறவினர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில், ‘தமிழர் விடுதலைப் போராட்டத்தில் நீ கலந்துகொண்டாயா? கலந்து கொண்டிருந்தால் நான் மனதார வாழ்த்துவேன்’ என அவரையும் போராட்டக் களத்துக்கு அழைத்துள்ளார்.

### நினைவைப் போற்றுதல்

08.04.1966 அன்று விராலிமலையில் நிறுவப்பட்ட சண்முகம் படிப்பகத்தை பேரறிஞர் அண்ணா திறந்து வைத்தார்.

1972-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், தீக்குளித்த தியாகச் செம்மல்களின் குடும்பங்களுக்கு மாதந்தோறும் தமிழ்நாடு அரசின் உதவித்தொகை அறிவித்தார் கலைஞர். சண்முகத்தின் தந்தை ராமையா மேடையேற்றி, மரியாதை செய்யப்பட்டார். 1979-ஆம் ஆண்டு புதுக்கோட்டையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சண்முகம் குடும்பத்துக்கு அன்றைய மதிப்பில் ரூ.2,000 அளித்து மதிப்பு செய்தார் கலைஞர். 07.08.1981 அன்று, சண்முகத்தின் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில், புதிதாகக் கட்டப்பட்ட கல்லறையை அன்பில் தர்மலிங்கம் திறந்து வைத்தார். இப்படித் தொடர்ச்சியாக மொழிப்போர் மறவரின் நினைவை கழகம் உயர்த்திப் பிடித்துக் கொண்டே இருக்கிறது.

2023-ஆம் ஆண்டு மொழிப்போர்த் தியாகிகளின் வீரவணக்க நாளில் உரையாற்றிய இன்றைய கழகத் தலைவர், “வீழ்ச்சியுற்றுக் கிடந்த தமிழினம் பகுத்தறிவுக் கருத்துகளால் இனமான மொழி உணர்வு பெற்று வீறுகொண்டு எழுந்த வீர வரலாற்றை ஒவ்வொரு தமிழரும் அறிந்துகொள்ள வேண்டும்” என ஆவேச உரை நிகழ்த்தினார். ஆம், அத்தனை தியாகங்களால் வளர்ந்த இயக்கம் தி.மு.கழகம் என்பதை தமிழ்நாடு அறிந்து கொள்ள வேண்டும்.

**...துடிக்கும்**

## மின்னணுப் பரிவர்த்தனை, குமுறும் வர்த்தகர்கள்!

‘இந்தியாவின் டிஜிட்டல் தலைநகரம்’ எனப் பெயரெடுத்த பெங்களூரு மாநகரத்தின் சிறு வர்த்தகர்களுக்குப் பேரதிர்ச்சியை அளித்துள்ளது ஒன்றிய வருமான வரித்துறை. அங்குள்ள, சிறிய பேக்கரிகள், பெட்டிக் கடைகள், தேநீர் அங்காடிகள், மளிகைக் கடைகள், காய்கறி, பழம், பூ விற்பனையாளர் என 14 ஆயிரம் கடைக்காரர்களுக்கு ஜி.எஸ்.டி. செலுத்தக் கோரி ஒரே நேரத்தில் அறிவிப்பு சென்றுள்ளதால், அதிர்ச்சி அடைந்துள்ளனர். இந்த வர்த்தகர்கள் பயன்படுத்திய யு.பி.ஐ. (UPI) பரிவர்த்தனைத் தரவுகளின் அடிப்படையில் வரி கணக்கிடப்பட்டு ரூ.20 லட்சம் முதல் ரூ.75 லட்சம் வரை வரி செலுத்த வேண்டும் என அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.



இதையடுத்து, வர்த்தக அமைப்பினர் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். மேலும் ஜி.எஸ்.டி. அமைப்பிடம் முறையீடு செய்த நிலையில், ‘சிறு கடைக்காரர்கள் ஜி.எஸ்.டி. தாக்கல் செய்தால், விவரங்களைச் சரிபார்த்து விலக்கு அளிக்கப்படலாம்’ என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். ரூ.40 லட்சத்துக்கு கீழ் வர்த்தகம் செய்பவர்களுக்கு ஜி.எஸ்.டி.யிலிருந்து விலக்கு அளிக்கப்படும் என சட்டம் உள்ள நிலையில், பெங்களூரு வியாபாரிகளுக்கு அனுப்பிய நோட்டீஸ், நாடு முழுவதும் உள்ள சிறு வர்த்தகர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

டிஜிட்டல் இந்தியா என்று, மின்னணுப் பரிவர்த்தனைகள் ஊக்குவிக்கப்பட்டது இதற்குத்தானா? எனக் கேள்வி எழுப்பியுள்ள வியாபாரிகள், இப்போது யு.பி.ஐ. மூலம் பரிவர்த்தனை வேண்டாம் என எதிராகத் திரும்பி உள்ளனர். இதிலும், நேர்வழியில்லையா? என்பதுதான் ஒன்றிய அரசுக்கு மக்கள் கேட்கும் கேள்வி.

## ஃப்ளாஷ்பேக்



### அவைத் தலைவர் பிறந்த நாளில்...!



பா.நூருல்லாஹ்

27.02.1997-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நெருக்கமான நண்பர், அன்றைய தமிழ்நாட்டு சட்டப்பேரவையின் அவைத் தலைவர் பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன் அவர்களின் 66-வது பிறந்த நாள், மதுரை, மீனாம்பாள்புரத்தில் உள்ள அவருடைய இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அப்போது, திராவிட இயக்கத்தின் மீது பற்றுக் கொண்டவரும், முஸ்லிம் ஜமாத் பள்ளியின் தலைவருமான என் தந்தை பாஷா அவர்கள் பெரியவர் பி.டி.ஆர். அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்து, கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட புகைப்படம்.

**– பா.நூருல்லாஹ்,**
**முதுகலைத் தமிழாசிரியர், மதுரை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### தேவிகுளம் பீர்மேடு தமிழருக்கே!

1956-ஆம் ஆண்டு, மாநில எல்லைப் பிரிப்பின்போது தேவிகுளம், பீர்மேடு ஆகிய பகுதிகள் தமிழ்நாட்டுடன் இணைக்கப்படாதது மட்டுமின்றி, செங்கோட்டை வட்டத்தில் ஒரு பகுதியை, கேரளத்திற்குத் தரும் முடிவினை, அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு எதிர்த்தன. தமிழ்நாடு எங்கும் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், கண்டனப் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. புதுவை மக்கள் சார்பாக புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போராட்டத்தில் கலந்துகொண்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131